# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>அமர் சித்திர ஜாதக கதைகளின் சிங்கள பதிப்புகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் விநியோகம்</u>

மெதின் பூரணை தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் 2025 மார்ச் 09 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் அமர் சித்திர ஜாதக கதைகளில் ஐந்து கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பின் 500 பிரதிகளை கையளித்துள்ளது. கிரிபத்கொடை ஸ்ரீ சுதர்சனராம புராண விகாரையின் ஸ்ரீ பஞ்ஞானதிஸ்ஸ தர்ம வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன.

2. இந்தியாவின் மிகவும் பிரபலமான சித்திரக் கதை பதிப்பாளர்களான அமர் சித்திர கதைகள் நிறுவனத்தால் மொழிபெயர்க்கப்பபட்டு வெளியிடப்பட்ட இந்நூல்கள், ஜாதகக் கதைகளின் காலத்தால் அழியாத ஞானத்தை ஈர்க்கக்கூடிய வகையிலும் அவற்றை இலகுவில் அணுகக்கூடிய வடிவத்திலும் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. புத்த பெருமானின் தார்மீக நெறிகளையும் ஆன்மீக போதனைகளையும் சித்திரக்கதைகள் மூலம் இளம் மாணவர்களுக்குக் கொண்டு செல்வதன் ஊடாக, இந்த முயற்சியானது சிறுவர்களை ஊக்குவிக்கவும், அச்சிறுவர்கள் மத்தியில் முக்கிய பௌத்த விழுமியங்களை வளர்ப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அங்குரன் தத்தா அவர்களால் இந்நூல்கள் வைபவரீதியாக மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இம்முயற்சிக்கு சிறுவர்களிடமிருந்து அதிக வரவேற்பு கிடைக்கப்பெற்றதுடன் அதன் மூலமாக அவர்களது தம்ம மற்றும் பௌத்த இலக்கிய அறிவு மேலும் மேன்மையடையும்.

4. பௌத்த மரபு மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் ஆழமான இருப்பினை வலியுறுத்தி இந்தியா இலங்கை இடையிலான நாகரீக பிணைப்பினை மேலும் வலுவாக்குவதை நோக்கிய செயற்பாடுகளில் இம்முயற்சி மற்றொரு செயற்திட்டமாகும். கவர்ச்சிமிக்கதும் ஈடுபாடுகள் நிறைந்ததுமான அணுகுமுறை மூலமாக சிறுவர்களை புத்த பெருமானின் போதனைகளுடன் நெருக்கமாக்குவதனை இலக்காகக் கொண்டு இலங்கை முழுவதும் உள்ள அறநெறிப்பாடசாலைகளுக்கு ஜாதக கதைகள் நூல்களை விநியோகிக்கும் பணிகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

************

**கொழும்பு**
**12 மார்ச் 2025**